Scan the code using 'e Courts Services'
mobile application downloaded from play store

# மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தாராபுரம்

**முன்னிலை : திரு. C. M. சரவணன், B.A., L.L.M.,**
**மூன்றாவது கூடுதல் மாவட்ட & அமர்வு நீதிபதி,**
**தாராபுரம்.**

2025–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ம் நாள் செவ்வாய்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2053, சோபகிருது வருடம் மாசி திங்கள் 13 ம் நாள்

**அசல் வழக்கு எண்.711/2023**
**[CNR No.TNTI03-000690-2023]**

கோவிந்தசாமி

.... வாதி

/ எதிர் /

நாட்டுதுரை .... பிரதிவாதி

இவ்வழக்கானது என் முன்னர் 06.02.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.தென்னரசு, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.P.தியாகராஜன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு, பிரதிவாதி அழைக்கப்பட்டும் வருகை தராததால், ஒருதலைப்பட்சமாகத் தீர்மானிக்கப்பட்டும், சாட்சிய, சான்றாவணங்களைப் பரிசீலனை செய்து, இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

22.04.2021–ம் தேதிய கிரைய ஒப்பந்தப்படி பிரதிவாதி, வாதியிடமிருந்து மீதி கிரைய தொகை ரூ.15,00,000/–யை பெற்றுக் கொண்டு, தாவா சொத்தினை வாதிப் பெயருக்கு இந்நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் எழுதி பதிந்து கொடுக்கும்படியும், அவ்வாறு பிரதிவாதி, வாதிக்கு கிரையப் பத்திரம் எழுதி பதிந்துக் கொடுக்க முன்வராத பட்சத்தில் இந்நீதிமன்றம் பிரதிவாதி சார்பாக தாவா சொத்தினை வாதி பெயருக்கு கிரைய பத்திரம் எழுதி பதிந்து கொடுத்து, தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதியிடம் ஒப்படைக்குமாறும்,

வாதிக்கு ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் வழங்க கேட்டும், மாற்று பரிகாரமாக, வாதிக்கு, பிரதிவாதி தாவாத் தொகை ரூ.8,48,043/- (எட்டு இலட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து நாற்பத்தி மூன்று மட்டும்)-மும், கிரைய முன் தொகை ரூ.6,67,750/-(ஆறு லட்சத்து அறுபத்து ஏழாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்)-க்கு, தாவா தேதி முதல் வசூல் தேதி வரை உரிய பின்வட்டியும் செலுத்தக்கேட்டும் மற்றும் இவ்வழக்கு செலவு தொகையையும் செலுத்தக் கேட்டும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2) வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம் :</u>

**2.1)** தாவா சொத்துக்கள், பிரதிவாதிக்கு கிரைய வகையில் தனித்து பாத்தியப்பட்டது. தாவா சொத்தை பிரதிவாதி, வாதிக்கு ரூ.21,67,750/-(ரூபாய் இருபத்தோறு லட்சத்து அறுபத்து ஏழாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்)-க்கு கிரையம் செய்வதாக ஒப்புக்கொண்டு 22.04.2021 அன்று, பிரதிவாதி, வாதியிடம் கிரைய முன்பணம் ரூ.6,67,750/-(ஆறு லட்சத்து அறுபத்து ஏழாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்)-யை சாட்சிகள் முன்னிலையில் பெற்றுக் கொண்டு, 22.04.2021-ம் தேதிய கிரைய உடன்படிக்கையை பிரதிவாதி, வாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளார். 2 மாத காலக்கெடுவிற்குள் வாதி, மீதிக் கிரைய தொகையை (ரூ.15,00,000/-), பிரதிவாதியிடம் செலுத்தி கிரையமும், சுவாதீனமும் பெற்றுக் கொள்ள வேண்டும் என கிரைய உடன்படிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

**2.2)** பிரதிவாதி அன்றைய தினம் ஆதார் அட்டை அசலைக் கொண்டு வராததால் மறுநாள் மேற்படி கிரைய ஒப்பந்தத்தை பதிவு செய்து கொடுப்பதாக கூறினார். ஆனால் பிரதிவாதி சொன்னபடி மறுநாள் வராமலும், கொரானா பாதிப்பு அதிகம் உள்ளதால் தன்னால் தற்போது முடியாதெனவும், 2 மாதத்திற்கு பிறகு நேரடியாக கிரையம் செய்து தருவதாகவும் கூறினார். வாதியும் அன்றைய கொரானா பெருந்தொற்று சூழ்நிலையை கருத்தில் கொண்டு பிரதிவாதியின் வார்த்தையை நம்பி பொறுமையாக இருந்தார். அடுத்த இரண்டு மாதங்கள் கழித்து வாதி பிரதிவாதியை தொடர்பு கொண்ட போது அவர் ஏதாவது காரணம் கூறிவிட்டு அடுத்த சில நாட்களில் நேரில் வருவதாக சாக்குபோக்கு கூறி வந்தார்.

Scan the code using 'e Courts Services' mobile application downloaded from play store

**2.3)** இந்நிலையில் வாதி தனது நண்பர் அலுவலகத்தில் இருந்த போது எதேச்சையாக அங்கு வந்த பிரதிவாதி மேற்படி இடத்தை கிரையம் செய்து தரமுடியாதெனக் கூறியதுடன் வாதியை மிரட்டினார். வாதி அதுகுறித்து கடந்த 29.07.2021–ந் தேதி தாராபுரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். அதை அறிந்த பிரதிவாதி பொதுமனிதர்கள் மூலம் வாதியை அணுகி தனக்கு வேறு பலபிரச்சனை இருப்பதாகவும், அந்த ஆத்திரத்தில் மேற்படிவீதம் பேசிவிட்டதாகவும் கூறி சமாதானம் பேசினார். மேலும் பிரதிவாதி தனது சொத்தின் அசல் ஆவணங்களை வேறு நபரிடம் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளதாகவும், அதை மீட்டு எடுத்து கிரையம் செய்து கொடுப்பதாகவும் கூறினார். அதை நம்பி வாதியும் வேறு நடவடிக்கை எடுக்காமல் பொறுமையாக இருந்து வந்தார். வாதி கிரையம் செய்து கொடுக்கும்படி கேட்கும்போதெல்லாம் பிரதிவாதி ஏதாவது ஒரு பொருத்தமான சாக்கு போக்கு கூறி காலதாமதம் செய்து வந்தார்.

**2.4)** இந்நிலையில் பிரதிவாதி திட்டமிட்டு கிரையம் கொடுக்க காலதாமதம் செய்து வருகிறார் என்ற சந்தேகம் வாதிக்கு ஏற்படவே வாதி கடந்த 26.06.2023– தேதி தனது வழக்கறிஞர் மூலம் கிரையம் செய்து கொடுக்க முன்வருமாறு கேட்டு பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினார். மேற்படி அறிவிப்பை பெற்றுக் கொண்ட பிரதிவாதி தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 08.07.2023–க் தேதியிட்டு பதில் அறிவிப்பு அனுப்பினார்.

**2.5)** பிரதிவாதி தனது பதில் அறிவிப்பில் வாதியை தனக்கு யாரென்றே தெரியாது எனவும், கிரைய உடன்படிக்கையின் நகலை தனக்கு அனுப்பும்படியும் கூறியுள்ளார். கிரைய உடன்படிக்கை இரண்டு நகல்கள் தயார் செய்யப்பட்டு வாதி மற்றும் பிரதிவாதி இருவரிடமும் ஆளுக்கு ஒன்றாக வழங்கப்பட்டுள்ளது. பிரதிவாதியின் தாயார் தாராபுரம் நஞ்சியம்பாளையம் கிராமத்தை சேர்ந்தவர் ஆவார். அவரது தாயாரின் சகோதரர் அதாவது பிரதிவாதியின் தாய் மாமன் குமார் என்பவர் ஆவார். என்.கே.குப்புச்சாமி என்பவர் மேற்படி குமாரின் பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். மேற்படி குமார், குப்புச்சாமி இருவரும் வாதிக்கு நண்பர்கள் ஆவர். அந்த அடிப்படையில் பிரதிவாதியும் வாதிக்கு நன்கு அறிமுகமானவர் ஆவார். அந்த நம்பிக்கையில் தான் வாதி முழுமையாக பிரதிவாதியை நம்பி கிரைய

ஒப்பந்தத்தை பதிவு செய்வதற்கு முன்பே தொகையை கொடுத்துவிட்டார். பிரதிவாதியும் தனது அசல் கிரைய ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை வாதிக்கு கொடுத்துள்ளார். இவ்வளவுக்கும் பின்னிட்டு பிரதிவாதி தனக்கு வாதியை யாரென்றே தெரியாதென மோசடியாக கூறியுள்ளார். மேலும் தாவா கிரைய உடன்படிக்கை வில்லங்க சான்றிதழில் வராததை பயன்படுத்தி தாவாச் சொத்துக்களை வில்லங்கப்படுத்த பிரதிவாதி தீவிரமாக முயன்று வருகிறார்.

**2.6)** வாதி தாவா கிரைய உடன்படிக்கையின்படி மீதிக் கிரையத் தொகையை பிரதிவாதியிடம் செலுத்தி தாவா சொத்தினை தனது செலவில் கிரையம் பெற்றுக் கொள்ள எப்போதும் தயாராகவும், முனைப்பாகவும் இருந்து வந்தார். ஆனாலும் பிரதிவாதி மேற்படிவீதம் செயல்பட முன்வராமல் இருந்து வருகிறார். கிரைய உடன்படிக்கையில் கிரையத்திற்கான கால அவகாசம் நிர்ணயிக்கப்பட்டு உள்ள போதிலும், வாதி எப்போதும் கிரையம் பெற தயாராக உள்ள நிலையில் மேற்படி கெடு ஒரு முக்கிய காரணி அல்ல. பிரதிவாதி வேண்டுமென்றே திட்டமிட்டு வாதியை ஏமாற்றி மோசடி செய்யும் நோக்கத்தில் செயல்பட்டு வருவதாக வாதி அறிகிறார். பிரதிவாதியின் செயல் வாதியும், பிரதிவாதியும் செய்து கொண்ட ஒப்பந்ததிற்கு எதிரானதாகும்.

**2.7)** இந்நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் மீதிக் கிரையத் தொகையை சமூகம் கோர்ட்டில் உடனடியாக டெபாசிட் செய்யவும் வாதி தயாராக உள்ளார். எனவே தாவா கிரைய உடன்படிக்கையின்படி பிரதிவாதி வாதியிடமிருந்து மீதிக் கிரையத் தொகையை (ரூ.15,00,000/−) பெற்றுக் கொண்டு இந்நீதிமன்றம் நிர்ணயிக்கும் தேதிக்குள் தாவாச் சொத்துக்களை வாதிக்கு வில்லங்க சுத்தமாய் கிரையம் செய்து சுவாதீனம் கொடுக்க வேண்டியும், அல்லாதபட்சத்தில் இந்நீதிமன்றமே தாவாச் சொத்தினை பிரதிவாதி சார்பில் வாதிக்கு கிரையம் செய்து சுவாதீனம் கொடுக்க வேண்டியும் மாற்றுபரிகாரமாக தாவா தொகை ரூ.8,48,043/−மும், உரிய பின்வட்டியும் வாதிக்கு பிரதிவாதியால் கிடைக்கும்படி தீர்ப்புச் செய்ய வேண்டி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார்.

Scan the code using 'e Courts Services'
mobile application downloaded from play store

<u>3) பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம் :–</u>

**3.1)** எதிர் வழக்குரையில் பிரதிவாதியால் வெளிப்படையாக ஒத்துக் கொள்ளும் சங்கதிகள் தவிர வாதியின் வழக்குரையில் கண்ட பிற சங்கதிகளையும் குறிப்பாக மறுக்கப்படுகிறது. அவைகளையும் வாதியே உண்மையென்று நிரூபிக்க வேண்டும். வாதி வழக்குரையில் கடந்த 22.04.2021ம் தேதி பிரதிவாதி, வாதியிடம் தாவாச் சொத்தினை ரூ.21,67,750/–க்கு கிரையம் பேசி அதே தேதியில் தக்க சாட்சிகள் முன்னிலையில் வாதியிடமிருந்து கிரையத் தொகையின் ஒரு பகுதியாக ரூ.6,67,750/–யை கிரைய அட்வான்ஸாக ரொக்கமாக பெற்றுக் கொண்டதாக சொல்வது உண்மையல்ல. மேற்படி தேதியில் இருந்து 2மாத கெடுவிற்குள் மீதி கிரையத் தொகை ரூ.15,00,000/– வாதி, பிரதிவாதியிடம் செலுத்தி கிரைய உடன்படிக்கை எழுதிக் கொண்டதாக சொல்வதும் உண்மையல்ல.

**3.2)** மேற்படி 22.04.2021ம் தேதி வாதிக்கு பிரதிவாதி எந்தவித கிரைய ஒப்பந்தமும் எழுதிக் கொடுக்கவில்லை. மேற்படி கிரைய ஒப்பந்தம் பற்றி பிரதிவாதி விசாரித்த வகையில் OS.No.260/2021 வழக்கின் வாதி குமாரசாமியின் கூட்டாளியாக இருந்து வாதி தாவா வழக்கை இப்பிரதிவாதி மீது தாக்கல் செய்து உள்ளார். மேற்படி குமாரசாமி இந்த பிரதிவாதியின் மீது தாராபுரம் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் OS.No.260/2021 வழக்கை இந்தப் பிரதிவாதியின் கையெழுத்தை மோசடியாக போட்டு பிராமிசரி நோட்டை உற்பத்தி செய்து வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி பிராமிசரி நோட்டில் தாவா வழக்கின் வாதி கோவிந்தசாமி சாட்சி கையெழுத்து செய்து மோசடியாக குமாரசாமியுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு பிராமிசரி நோட்டு உற்பத்தி செய்துள்ளார்கள். மேற்படி OS.No.260/2021 வழக்கில் தாவாச் சொத்து தீர்ப்புக்கு முன்பு ஜப்தி செய்ய IA.No.572/2021 என்ற மனுத்தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு கடந்த 05.07.2023ம் தேதி இருதரப்பு விசாரணைக்கு பின்பு மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. OS.No.260/2021 வழக்கின் வாதி குமாரசாமியும், இவ்வழக்கின் வாதியான கோவிந்தசாமியும் கூட்டுச் சேர்ந்து இப்பிரதிவாதி மீது தாவா OS.No.711/2023 வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார். வாதியிடமிருந்து இந்தப் பிரதிவாதி எந்தவித தொகையும் பெறவில்லை. மேலும் எந்தவித கிரைய ஒப்பந்தமும்

Scan the code using 'e Courts Services' mobile application downloaded from play store

வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுக்கவில்லை. தாவா கிரைய ஒப்பந்தம் மோசடியானதாகும்.

**3.3)** தாவா கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்படாத காரணத்தினால் சட்டப்படி நிலை நிற்கத்தக்கதல்ல. மேலும் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். தாவா கிரைய ஒப்பந்தத்தை வாதியும், வாதியின் நண்பரும், குமாரசாமியும் மோசடியாக இந்தப் பிரதிவாதிக்கு எதிராக உற்பத்தி செய்துள்ளதால் இந்தப் பிரதிவாதி தரப்பில் மேற்படி வாதி கோவிந்தசாமி, வாதியின் நண்பர் குமாரசாமியின் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க இதன் மூலம் ரிசர்வ் செய்து கொள்கிறார்.

**3.4)** வாதியின் வழக்கறிஞர் முன்னறிவிப்பு நோட்டீசுக்கு இந்தப் பிரதிவாதி தரப்பில் பதில் அறிவிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. தாவா வழக்கு இந்தப் பிரதிவாதிக்கு எதிராக வாதி தாவா கிரைய ஒப்பந்தத்தை உற்பத்தி செய்து பிரதிவாதியின் மீது தாக்கல் செய்துள்ளார். தாவா வழக்கில் வாதிக்கு எந்தவித வழக்கு மூலமும் இல்லை.

**3.5)** வழக்குரையில் பாரா 5ல் உள்ள சங்கதிகள் உண்மையல்ல. பிரதிவாதி அன்றைய தினம் ஆதார் அட்டை அசலை கொண்டு வராததால் மறுநாள் கிரைய ஒப்பந்தத்தை பதிவு செய்து கொடுப்பதாக கூறியதாக சொல்வது உண்மையல்ல. கொரோனோ பாதிப்பு அதிகம் உள்ளதால் தன்னால் தற்போது வர முடியாது என்றும், 2 மாதத்திற்கு பிறகு நேரடியாக கிரையம் செய்து தருவதாகவும் கூறியதாக சொல்வது உண்மையல்ல. வாதி 29.07.2021ம் தேதி தாராபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில் பொது மனிதர்கள் மூலம் வாதியை அணுகி பிரதிவாதி சமாதானம் பேசியதாக சொல்வதும் உண்மையல்ல. வழக்குரை பாரா 6,7,8 உள்ள சங்கதிகள் உண்மையல்ல. அவைகள் தாவா வழக்கிற்காக வாதியால் மோசடியாகவும், கற்பனையாகவும் ஜோடிக்கப்பட்டவை ஆகும்.

**3.6)** தாவாச் சொத்துக்களை பிரதிவாதி வில்லங்கப்படுத்த முயற்சி செய்து வருவதாக சொல்வது உண்மையல்ல. தாவா வழக்கை வாதியும், வாதியின் நண்பர் குமாரசாமியும் இந்தப் பிரதிவாதியிடமிருந்து சட்ட விரோதமாக சொத்துக்களை அபகரிக்க வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் தாவா வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்கள். தாவா

Scan the code using 'e Courts Services' mobile application downloaded from play store

வழக்கில் வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல. இந்தப் பிரதிவாதி தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையை இதன் மூலம் Reserve செய்து கொள்கின்றார். ஆகையால் இந்நீதிமன்றம் வாதியின் வழக்கை பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4) வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.**

1. வாதியும் பிரதிவாதியும் தாவா சொத்து சம்மந்தமாக 22.04.2021 தேதியில் கிரைய உடன்படிக்கை செய்து கொண்டார்கள் என்பது உண்மையா ?
2. வாதி கோரியுள்ள ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கிடைக்கத்தக்கதா ?
3. வாதி கோரியுள்ள மாற்றுப் பரிகாரம் கிடைக்கத்தக்கதா ?
4. வாதிக்கு கிடைக்கும் பரிகாரம் என்ன ?

**5)** இவ்வழக்கில் வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆகவும் மற்றும் ஒரு சாட்சி வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். வாதி தரப்பில், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) <u>எழுவினா 1 முதல் 4 வரை</u>

6.1) இவ்வழக்கில், வாதி, ஏற்றதை ஆற்றுக, பற்றுகை மற்றும் மாற்றுபரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். வா.சா.ஆ.1–யை பார்வையிடும்போது, வாதிகளுக்கும், பிரதிவாதிக்குமிடையே 22.04.2021 அன்று தாவா சொத்துக்களை பொறுத்து கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. வா.சா.1 முதல் வா.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்களையும் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது, வா.சா.ஆ.1–ன் படி, மீதி கிரைய தொகையை வாதி, பிரதிவாதிக்கு செலுத்தி, கிரையம் எழுதிப்பெற வாதி, தயாராகவும், விருப்பமாகவும் இருந்தபோதும், பிரதிவாதி தாவா சொத்தை வாதிக்கு கிரையம் எழுதிக் கொடுக்காமல் இருந்துள்ளது தெரிய வருவதால், வாதிக்கு பிராதில் கோரியபடி

Scan the code using 'e Courts Services'
mobile application downloaded from play store

ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்து, அவ்வாறே இவ்வெழுவினாக்கள் 1 முதல் 4 –க்கு விடை காணப்படுகிறது.

முடிவாக, வாதி மீதி கிரைய தொகையான ரூ.15,00,000/–(ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)–யை, இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள், இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டுமென்றும், அவ்வாறு வைப்பீடு செய்யப்படும், மேற்படி தொகையான ரூ.15,00,000/–(ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)–யை, பிரதிவாதி, இந்நீதிமன்றத்திலிருந்து பெற்றுக் கொண்டு, மேற்கொண்டு ஒரு மாத காலக்கெடுவிற்குள் தாவா சொத்தை வாதிக்கு கிரைய பத்திரம் எழுதி பதிந்து கொடுக்கும்படியும், ஒருவேளை பிரதிவாதி, வாதிக்கு கிரைய பத்திரம் எழுதி பதிந்துக் கொடுக்க முன்வராத பட்சத்தில், இந்நீதிமன்றமே, இப்பிரதிவாதி சார்பாக, வாதிக்கு கிரையப்பத்திரம் எழுதி பதிந்து கொடுக்கும்படிக்கு, வாதிக்கு ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வழங்கியும் மற்றும் இவ்வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.02.25 19:47:02 +0530

மூன்றாவது கூடுதல் மாவட்ட & அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

Scan the code using 'e Courts Services'
mobile application downloaded from play store

**வாதி தரப்பு சாட்சிகள்:–**

1. வா.சா.1 – கோவிந்தசாமி

2. வா.சா.2 – N.K.குப்புச்சாமி

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

| ஆவணங்களின் வரிசை எண் | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 22.04.2021 | வாதியும், பிரதிவாதியும் செய்து கொண்ட கிரைய உடன்படிக்கை - அசல் |
| வா.சா.ஆ.2 | 29.02.2016 | பிரதிவாதி வாதியிடம் கொடுத்த பிரதிவாதிப் பெற்ற அசல் கிரைய ஆவணம் – நகல் |
| வா.சா.ஆ.3 | 29.07.2021 | வாதி தாராபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான இரசீது |
| வா.சா.ஆ.4 | 26.06.2023 | பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு–நகல் |
| வா.சா.ஆ.5 | 07.07.2023 | அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை |
| வா.சா.ஆ.6 | 08.07.2023 | பிரதிவாதி வழக்கறிஞர் அனுப்பிய பதில் அறிவிப்பு |

**பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–** இல்லை

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.02.25 19:47:11 +0530

மூன்றாவது கூடுதல் மாவட்ட & அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

Scan the code using 'e Courts Services'
mobile application downloaded from play store

--------------------------------
Fair/ Draft Judgment
O.S.No.711/2023
Date :25.02.2025
III ADJ, DPM
-----------------------------